பக்கங்கள் - 06

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

மின்னிதழ்

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 21 வெள்ளிக்கிழமை (04.06.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 167




## 5 ஆயிரம் ரூபாய் வழுங்கப்படவில்லை அராலியில் பொதுமக்கள் கவனயீர்ப்பு

### மோசடி இடம்பெறுவதாகவும் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

கொரோனாக் கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபாய் வழங்கப்படவில்லை என மக்கள் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர். 02



## மேலும் 3 இலட்சம் தடுப்பூசிகள் யாழுக்கு தேவை

### அரச அதிபர் க.மகேசன்

(குப்பிழான்)

சுகாதாரப் பிரிவினருடைய கணக்கின்படி யாழ்.மாவட்டத்திற்கு மேலும் மூன்று இலட்சத்துக்கும் அதிகமான தடுப்பூசிகள் தேவையாகவுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார். 02

## நாடளாவிய ரீதியில் சதொச திறக்கப்படும்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் உள்ள சதொச விற்பனை நிலையங்கள் நாளாந்தம் திறக்கப்படவுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள் 02

## யாழில் கொரோனா உக்கிரம்

## எழுமாற்றுப் பரிசோதனையில் 22 பேருக்கு தொற்று

### சமூகத்தில் பல தொற்றாளர்கள் நடமாடுகின்றனர்

**(யாழ்ப்பாணம்)**

***யாழ்.மாவட்டத்தில் கொரோனா வைரஸ் உக்கிரமமாக பரவி வருகின்றது. யாழில் மேற்கொள்ளப்பட்ட எழுமாற்றுப் பரிசோதனையில் 22 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.***

***யாழில் சமூக மட்டத்தில் தற்போதும் கொரோனாத் தொற்றாளர்கள் நடமாடுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.***

யாழில் நேற்று மேற்கொள்ளப்பட்ட எழுமாற்றுப் பரிசோதனையில் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 3 பேர், யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 12 பேர், கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி 02

## கொரோனா +3,264

(கொழும்பு)

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 3,264 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். 02

## சுகாதார ஊழியர்கள் நாடளாவிய ரீதியில்

### அடையாள பணிப் பகிஸ்கரிப்பு



02

## கொரோனாவால் +42 பேர் பலி

(கொழும்பு)

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 42 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 1,608 ஆக அதிகரித்துள்ளது.(ம-3)

## நாமலுக்கு மற்றுமொரு அமைச்சு பதவி

(கொழும்பு)

டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் நிறுவன மேம்பாடு இராஜாங்க அமைச்சராக 02

## வட மாகாணத்தில் நேற்றும் 130 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் நேற்று 130 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக் 02

## கந்தரோடையில் வீட்டுக்குள் நுழைந்து திருடர்கள் அட்டகாசம்

### பல இலட்சம் பெறுமதியான நகைகள் கொள்ளை

### நால்வர் படுகாயம்; மூவர் கைது

(குப்பிழான்)

கந்தரோடையில் கோடரி, கத்திகளுடன் முகங்களைத் துணிகளால் முழுமையாக மறைத்தவாறு வீடொன்றுக்குள் உள் 02

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சதொச...

ளார்.

நேற்றுமுன்தினம் இரவு சதொச விற்பனை நிலையங்கள் அத்தியாவசிய தேவையாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதை அடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில் நடமாடும் வியாபாரிகளுக்கு சதொச ஊடாக குறைந்த விலையில் பொருட்களை கொள்வனவு செய்து விற்பனை செய்ய முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (மு-3)

## 5 ஆயிரம் ரூபாய்...

மேலும் குறித்த கொடுப்பனவில் மோசடி இடம்பெற்றுள்ளதாகவும் அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கவனயீர்ப்பில் ஈடுபட்டவர்கள் கூறுகையில்,

நாங்கள் அன்றாடம் வேலைக்கு சென்று உழைத்துச் சாப்பிடும் கூலித் தொழிலாளிகள். எமக்கு இதற்கு முதல் புதுவருடத்திற்கு கொடுத்த 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவும் வழங்கப்படவில்லை. தற்போது வழங்கப்படும் கொரோனாக் கொடுப்பனவும் வழங்கப்படவில்லை.

சமுர்த்தி பயனாளிகளுக்குத்தான் இந்த கொடுப்பனவு வழங்கப்படுகிறது. சமுர்த்தி பயனாளிகளுக்கு சமுர்த்தி முத்திரைக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

அத்துடன் கொரோனாக் கொடுப்பனவும் வழங்கப்படுகிறது. தற்போது வேலைக்கு செல்ல முடியாமல் நாங்களும் கஷ்டத்தின் மத்தியில்தான் வாழ்க்கையை நடத்துகின்றோம். நாங்கள் சாப்பாட்டிற்கு என்ன செய்வது?

அத்துடன் எங்களது குடும்ப அட்டைகளை சமுர்த்தி மற்றும் கிராம சேவகர் வாங்கி வைத்துவிட்டு நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) திருப்பி எங்களிடம் தந்துள்ளனர்.

அந்த குடும்ப அட்டையில் மேலும் ஒரு 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட்டதாக திகதி போடாமல் பதிவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் எமது கையெழுத்தை ஒத்த கையெழுத்தும் இடப்பட்டுள்ளது.

சிலரது குடும்ப அட்டையில் மேலதிகமாக பதிவு செய்த 5 ஆயிரம் ரூபாய் பேனாவினால் வெட்டப்பட்டுள்ளது. சிலரது குடும்ப அட்டையில் அது வெட்டப்படவில்லை.

எங்களது கையெழுத்து போல கையெழுத்து எமது குடும்ப அட்டையில் எவ்வாறு வந்தது என உத்தியோகத்தர்களை நாங்கள் வினவிய போது அது தவறுதலாக நிகழ்ந்துள்ளது என பொறுப்பற்ற விதத்தில் பதில் கூறுகின்றனர்.

எனவே உரியவர்கள் இதனை கருத்தில் கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தனர். (மு-3,104)

## கந்தரோடையில்...

நுழைந்த திருடர்கள் குழு வீட்டில் உறக்கத்திலிருந்தவர்களைக் கடுமையாகத் தாக்கியும், அச்சுறுத்தியும் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகளைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் தற்போது பயணக் கட்டுப்பாடு நடைமுறையிலுள்ள நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை அதிகாலை 3.30 மணியளவில் கந்தரோடை மேற்கு சங்காவத்தை வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் நடந்துள்ளது. இதில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்றுமுன்தினம் குறித்த வீட்டு உரிமையாளரான வயோதிபப் பெண்மணியின் மகனின் முதலாவது ஆண்டுத் திவசம் இடம்பெற்ற நிலையில் வேலைகள் செய்த அசதியில் வீட்டிலிருந்த அனைவரும் உறங்கியுள்ளனர்.

இதன்போது வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் வீட்டில் இருந்தவர்களை கடுமையாகத் தாக்கிவிட்டு பெருமளவு நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து பொலிஸாரின் மோப்ப நாயின் உதவியுடன் குறித்த வீட்டிலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றுக்கு அப்பாலுள்ள பகுதியில் சந்தேகத்தின் பேரில் மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, திருடர்களின் தாக்குதல்களால் காயமடைந்த வயோதிபப் பெண்மணியின் இரண்டு மகள்களும், கோடரி மற்றும் தென்னை மட்டைத் தாக்குதல்களுக்குள்ளான நிலையில் மருமகனும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (மு-3,18)

## சுகாதார ஊழி...

தாதியர்கள் மற்றும் சுகாதார ஊழியர்கள் யாழ்ப்பாணம் உட்பட 9 மாவட்டங்களில் நேற்றைய தினம் 9 அம்ச கோரிக்கைகளினை முன்வைத்து அடையாள பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

யாழ்.போதனா வைத்தியசாலை தாதியர்களும் நேற்றுக் காலை அடையாள பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டதோடு யாழ்.போதனா வைத்தியசாலை முன்றலில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அனைத்து ஊழியர்களுக்கும் கொரோனாக் கால விசேட கொடுப்பனவு, விசேட விடுமுறை நாட்களில் கடமைக்கு சமுகமளித்தால் விசேட கொடுப்பனவு, சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையில் கொரோனா தடுப்பு செயலணி அமைத்தல் உட்பட ஒன்பது கோரிக்கைகளை முன்வைத்தே நேற்றுக் காலையிலிருந்து பிற்பகல் 12:30 மணி வரை போராட்டம் இடம்பெற்றிருந்தது. (மு-3,18,33,100,299)

## மேலும் 3 இலட்...

நேற்று வியாழக்கிழமை யாழ். மாவட்டச் செயலகத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் எவ்வளவு தடுப்பூசி வழங்குகின்றதோ அதனை உடனடியாகப் பொதுமக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

யாழ்.மாவட்டத்தில் முதலாம் கட்டத் தடுப்பூசி வழங்கும் செயற்பாடு கடந்த ஞாயிற்றுக்கிழமையிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக எமக்கு கிடைத்த 50 ஆயிரம் தடுப்பூசிகளில் அனைத்து தடுப்பூசிகளும் முடிவுறுத்தப்பட்டுள்ளன.

ஏற்கெனவே 61 கிராம சேவகர் பிரிவுகளுக்குத் தடுப்பூசி வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

எனினும், பின்னர் கிராம சேவகர் பிரிவுகள் அதிகரிக்கப்பட்டமையால் 96 கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்குப் பகுதியளவில் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி வழங்கல் நடவடிக்கையில் அனைத்து மக்களும் மிகவும் ஆர்வம் காட்டி வருகின்றார்கள். ஆகவே, அடுத்த கட்டத் தடுப்பூசி கிடைத்தவுடன் ஏற்கெனவே திட்டமிடப்பட்ட மிகுதிக் கிராம சேவகர் பிரிவுகளிற்கும் இந்தத் தடுப்பூசி வழங்கப்படும்.

உயர் ஒவ்வாமை போன்ற காரணங்களுக்காக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுவோருக்கு வழங்கவென 500 தடுப்பூசிகள் பிரதேச வைத்தியசாலைகளுக்கும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டிருப்பதாக எங்களுக்கு சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.

இதனைவிட சுமார் 1,600 தடுப்பூசிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கும் கல்விசாரா உத்தியோகத்தர்களுக்கும் என ஒதுக்கீடு செய்யப்பட்டது. நான்கு பிரதேச செயலர் பிரிவுகளில் எஞ்சிய தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தெல்லிப்பழை, உடுவில், ஊர்காவற்றுறை மற்றும் சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் எஞ்சிய தடுப்பூசிகள் இன்று (நேற்று) வழங்கப்பட்டது.

அத்துடன் யாழ்.மாவட்டத்தில் முதலாம் கட்டத் தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (மு-3,18,33)

## 22 பேருக்கு...

பிரிவில் 4 பேர், நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர், காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர் என 22 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (மு-3)

## 130 பேருக்கு...

கழக ஆய்வுகூடம், யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடம் மற்றும் எழுமாறான பரிசோதனைகளிலேயே குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனைகளில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த 29 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 10 பேரும் கிளிநொச்சியின் கரைச்சி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 19 பேரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட எழுமாறான (RAT) பரிசோதனையில் 22 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் வடக்கு மாகாணத்தினைச் சேர்ந்த 79 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

**முல்லைத்தீவு மாவட்டத்தில் 25 பேருக்குத் தொற்று**

ஒட்டுசுட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 10 பேர், மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர், முல்லைத்தீவு மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 11 பேர், மாந்தை கிழக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 03 பேர்.

**யாழ்ப்பாண மாவட்டத்தில் 35**

சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 14 பேர், மருதங்கேணி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 7 பேர், மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையில் 2 பேர், காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில்7 பேர், உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 5 பேர்.

**வவுனியா மாவட்டத்தில் 15 பேர்**

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 5 பேர், சிதம்பரபுரம் பிரதேச வைத்தியசாலையில் 3 பேர், யாழ்.போதனா வைத்தியசாலையில் 6 பேர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒருவர்.

**கிளிநொச்சி மாவட்டத்தில் 04**

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஒருவர், கிளிநொச்சி கரைச்சி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2 பேர், அக்கராயன்குளம் ஆதார வைத்தியசாலையில் ஒருவர் உட்பட்டவர்களே தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (மு-3,18,33)

## நாமலுக்கு...

நாமல் ராஜபக்ஷ பதவியேற்றுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில், அவர் நேற்று பதவியேற்றுக் கொண்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (மு-3)

## +3,264...

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 195,811 ஆக உயர்வடைந்துள்ளது. (மு-3)

> மனிதனின் செயல்கள், அவர்கள் சிந்தனைகளுக்குச் சிறந்த விளக்கங்கள் ஆகும்.
>
> – ஜான் லாக்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நடக்கும் என்பார் நடவாது நடவாதென்பார் நடந்து விடும்

நடக்கும் என்பார் நடக்காது. நடக்காதென்பார் நடந்துவிடும்

என்பது சினிமாப் பாடல் வரியாயினும் அதன் தத்துவம் நிதர்சனமானது.

நடக்கும் என்று நினைத்த பல விடயங்கள் நடவாமல் போனமை அனுபவத்தில் கண்டறியப்பட்ட உண்மை.

அதுபோல, இவரால் இது ஆகும். இவர்தான் இதனைச் செய்து முடிப்பார் என்று நம்பியவை தலைகீழாய்ப்போன வரலாறுகளும் உண்டு.

இதற்கு இலங்கை அரசியலில் நிறைந்த எடுத்துக் காட்டுகள் உள.

கடந்த ஆட்சியில் ஜனாதிபதியாக மைத்திரி பால சிறிசேனவும் பிரதமராக ரணில் விக்கிரம சிங்கவும் இருந்தபோது அரசியலமைப்புச் சீர்திருத்தம் அரங்கேறும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மலையாய் நம்பியது.

அதிலும் குறிப்பாக, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் அரசியலமைப்புச் சீர்திருத்தம் நிறைவேறிவிட்டது போன்ற மனப் பிரமையில் இருந்தார் என்று கூடக் கூறலாம்.

ஆனால் நடந்தது என்ன என்பதை நாம் கூறி யாரும் தெரிந்து கொள்ள வேண்டிய தேவையில்லை.

இனப்பிரச்சினைக்கான தீர்வை யார் முன்வைப்பார்கள் என்று தமிழ்த் தரப்புகள் நம்பினவோ அவையெல்லாம் ஏமாற்றத்தில் முடிந்து போனதுதான் நிஜம்.

இதுபோல தமிழ் அரசியல் தரப்புகள் விடயத்திலும் தமிழ் மக்கள் நம்பிக் கெட்ட சம்பவங்கள் ஏராளம்.

இவ்வாறு இவர் செய்வார். இவரால் இது நடக்கும். இவர்தான் ஏற்புடையவர் என்று நினைத்தவை ஏமாற்றத்திலும் தோல்வியிலும் முடிந்துபோன உதாரணங்கள் தமிழர் தரப்பில் மட்டும்தான் என்று எவரும் நினைத்து விடக்கூடாது.

மாறாக தற்போதைய ஆட்சியாளர்கள் தொடர்பில் சிங்கள மக்களுக்கு ஏற்பட்டுள்ள அனுபவம் என்பதும் நடக்கும் என்பார் நடக்காது என்ற தத்துவத்தின் அமுலாக்கம்தான்.

ஆம், போர் வெற்றியை மையப்படுத்தியும் தமிழ் மக்களுக்குப் பாடம் புகட்டக்கூடியவர்கள் என்ற கணிப்பிலும் இன்றைய ஆட்சிப் பீடத்தை சிங்கள மக்கள் அரியணை ஏற்றினர்.

இருந்தும் அவர்களின் எதிர்பார்ப்பு மறைக்கணியமாகவே இருக்கிறது.

ஆம், இலங்கை மீதான சீனாவின் ஆக்கிரமிப்பும் தென்பகுதிக் கடற்பரப்பில் இராசாயனக் கப்பல் எரிந்துபோனமையும் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள பேராபத்தின் அறிகுறிகளாம்.

என்ன செய்வது அதீத எதிர்பார்ப்புகள் பல வேளைகளில் எரிந்த கப்பலின் கதியாகிப் போவதும் உண்டு என்பதுதான் மெய்மை.

# உப்பு கொள்வனவு செய்ய முண்டியடித்த மக்கள்

நாட்டில் உப்பிற்கு தட்டுப்பாடு ஏற்படலாம் என வெளியாகிய செய்தியை தொடர்ந்து மன்னாரில் உள்ள மாந்தை உப்பு உற்பத்தி நிலையத்தில் நேற்றைய தினம் வியாழக்கிழமை காலை கறி உப்பினை கொள்வனவு செய்ய மக்கள் முன்டியடித்துக் கொண்டனர்.

எனினும் மக்களுக்கு தேவையான உப்பு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு துறை முகத்துக்கு அப்பால் உள்ள கடலில் தீப்பிடித்த கப்பலினால் கடலில் இரசாயன பொருட்கள் கலந்துள்ளமையினால் நாட்டில் உப்பு உற்பத்தியில் தட்டுப்பாடு ஏற்படலாம் என செய்திகள் வெளி வந்துள்ளது.

எனினும் மன்னார் மாவட்ட மக்களுக்கு தேவையான உப்பு போதிய அளவு உள்ளதாகவும் மக்கள் இவ்வாறு முண்டியடித்துக் கொண்டு உப்பினை கொள்வனவு செய்ய வேண்டிய தேவை இல்லை எனவும் தற்போது அதிக அளவு உப்பு கையிருப்பில் உள்ளதோடு, பெரும் போக உப்பு உற்பத்தியும் தற்போது இடம் பெற்று வருவதாக மன்னாரில் உள்ள மாந்தை உப்பு உற்பத்தி நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (4-6,285)

# அத்தியாவசிய சேவைகளை எதிர்வரும் வாரத்தில் ஆரம்பிக்க தீர்மானம்

## திலும் அமுனுகம தெரிவிப்பு

(கொழும்பு)

சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களுக்கமைய அனைத்து அத்தியாவசிய சேவைகளையும் எதிர்வரும் வாரம் முதல் மீள ஆரம்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

பொது போக்குவரத்து சேவையில் சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் கடுமையான முறையில் செயற்படுத்தப்படும் என போக்குவரத்து மற்றும் சமூக பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

நாடு தழுவிய ரீதியில் தற்போது அமுலிலுள்ள பயணத்தடை தளர்த்தப்பட்டதன் பின்னர் பொது போக்குவரத்து சேவையினை மீள ஆரம்பிப்பது குறித்து வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தை கருத்திற் கொண்டு தற்போது நாடு தழுவிய ரீதியில் பயணத்தடை அமுல்படுத்தப்பட்டுள்ளன. எதிர்வரும் வாரம் முதல் பல அத்தியாவசிய சேவைகளை சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களுக்கமைய மீள ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொவிட்-19 வைரஸ் பரவலை கட்டுப்படுத்த சமூக இடைவெளியை பேணுவது அவசியமாகும். அரச மற்றும் தனியார் போக்குவரத்து சேவைகளில் சமூக இடைவெளியை முறையாக கடைப்பிடிப்பதில் பாரிய சிக்கல் நிலை காணப்படுகிறது. பயணத்தடை தளர்த்தப்பட்டன் பின்னர் பொது போக்குவரத்து சேவையில் சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் கடுமையான முறையில் செயற்படுத்தப்படும்.

அரச மற்றும் தனியார் சேவையாளர்கள் கடமைக்கு வருகை தரும் நேரத்தை மாற்றியமைக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. ஒரு சேவையாளர் ஒரு வாரத்தில் குறைந்தளவு நாட்களில் சேவைக்கு வருகை தரும் செயற்திட்டம் மீண்டும் செயற்படுத்தப்படும். அரச மற்றும் தனியார் பேருந்துகளில் பயணிகள் ஆசன எண்ணிக்கைக்கு அமையவே பயணம் செய்ய முடியும்.

அலுவலக புகையிரத சேவையினை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போதைய நெருக்கடியான சூழலில் பொது மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். தேவையற்ற பயணங்களை முழந்தளவிற்கு குறைத்துக் கொள்வது அவசியமாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (4-6)

# நானாட்டான் பகுதியில் திடீர் பிசிஆர் பரிசோதனை

(மன்னார்)

நானாட்டான் பகுதியில் சுகாதார துறையினர் நேற்று வியாழக்கிழமை (3) காலை திடீர் சுற்றிவளைப்பினை மேற்கொண்டு பொது மக்களுக்கு உடனடியாக பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டது. குறிப்பாக பயணத்தடை நாட்களில் வெளியில் நடமாடுகின்ற மற்றும் கடமை நிமிர்த்தமாக சென்ற அரச உத்தியோகத்தர்கள், வியாபாரிகள், விவசாயிகள் என 150 க்கும் மேற்பட்டவர்களுக்கு நானாட்டான் பேருந்து நிலையத்தில் வைத்து பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

குறித்த நடவடிக்கையில் நானாட்டான் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஜூபன் லெம்பேட், நானாட்டான் பொது சுகாதார பரிசோதகர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6,285)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக **நாளை 5 ஆம் திகதி சனி** காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.00 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** அரசடி, மருதடி, ஆசிரியர் வீதி சந்தி, டச்சு வீதி கண்டுவில், பெருங்குளம் சந்தி, கரந்தன் ஓமினி அலுமினியம் தொழிற்சாலை, நீர்வேலி, கரந்தன், போயிட்டி, பொக்கணை, ஊரெழு அம்மன் கோவிலடி, அட்டகிரி, மூத்தவி நாயகர் கோவிலடி, நவாலி, கல்லூரி வீதி தம்பசிட்டி, சாளம்பை, தம்பசிட்டி சந்தி, வி.எம். வீதி ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும்.

நாட்டில் பயணத்தடை அமுல்படுத்தப்படும் நாட்களில் திட்டமிட்ட மின் தடங்கலானது மீள் பரிசீலனை செய்து மேற்கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# முருத்தெட்டுவே தேரருக்கு கொலை மிரட்டல்

(கொழும்பு)

தமக்கு கொலை மிரட்டல் விடுக்கப்படுவதாக அபயாராமயவின் மாநாயக்கத் தேரர் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

கூடுதலாக சத்தம் போட்டால் கவனம் என தமக்கு கொலை மிரட்டல் விடுக்கப்படுவதாக அவர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

இவ்வாறான அச்சுறுத்தல்களை கண்டு தாம் அஞ்சப் போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தை சரியான வழியில் இட்டுச் செல்லவே தாம் போராடுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனந்த தேரர் தற்போதைய பொதுஜன முன்னணி அரசாங்கம் ஆட்சி பீடம் ஏறுவதற்கு மிக முக்கியமான பங்களிப்பினை வழங்கியவர்களில் ஒருவர் என்பதுடன், பிரதமர் மகிந்த உள்ளிட்ட தற்போதைய ஆட்சியாளர்கள் அப்போதைய அரசாங்கத்திற்கு எதிரான ஊடக சந்திப்புக்களை அபயாராமயவில் நடாத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6)

# சுகாதார வழிகாட்டலை மீறிய விதத்தில் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம்

## விசேட வைத்தியர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**பொதுமக்களுக்கு தடுப்பூசி ஏற்றும் செயற்பாடுகள் தொடர்பில் அரசாங்கத்திற்கும், அதிகாரிகளுக்கும் தெளிவான வேலைத்திட்டமொன்றும் இல்லை. தொற்றுப்பரவலை கட்டுப்படுத்த அரசாங்கம் எடுத்த நடவடிக்கையானது சுகாதார தரப்பின் தீர்மானத்திற்கு முரணானதென தொற்றுநோய்கள் குறித்த நிபுணரும், உலக சுகாதார ஸ்தாபனத்தின் முன்னாள் ஆலோசகருமான விசேட வைத்தியர் நிஹால் அபேசிங்க தெரிவித்தார்.**



ரஷ்யாவின் தயாரிப்பான ஸ்புட்னிக் தடுப்பூசியில் ஒரு டோஸ் பயன்படுத்தினால் போதுமானதாக சுகாதார அமைச்சும், நிபுணர்களும் வலியுறுத்தியுள்ளதாக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ள நிலையில், குறித்த கருத்தானது நிபுணர்கள் மத்தியில் விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து தொற்றுநோய்கள் குறித்த நிபுணரும், உலக சுகாதார ஸ்தாபனத்தின் முன்னாள் ஆலோசகருமான விசேட வைத்தியர் நிஹால் அபேசிங்கவிடம் வினவிய போதே அவர் இவற்றை தெளிவுபடுத்தினார்.

அவர் மேலும் கூறுகையில், கொவிட் -19 வைரஸ் பரவலை கட்டுப்படுத்த வெவ்வேறு நாடுகளிடம் இருந்து தடுப்பூசிகளை அரசாங்கம் பெற்று வருகின்றது. அதில் தவறேதும் இல்லை, ஐரோப்பாவிற்கு ஏற்ற வகையிலும், ஆசியாவிற்கு ஏற்ற வகையிலும்தடுப்பூசிகளின்தன்மைகளில் சில மாற்றங்கள் ஏற்படும்.

ஆனால் பொதுவான ஒரு நோயை கட்டுப்படுத்த சகல தடுப்பூசிகளும் பயன்படுத்தப்படுகின்றன.

எவ்வாறு இருப்பினும் இலங்கையில் மக்களுக்கு தடுப்பூசிகளை ஏற்ற முன்னர் தடுப்பூசியின் தன்மை, அதன் தாக்கம், ஒருவருக்கு எத்தனை டோஸ் ஏற்றப்பட வேண்டும் என்பது குறித்த முழுமையான அறிவும், தெளிவும் சுகாதார அமைச்சிற்கும், தீர்மானம் எடுக்கும் நபர்களுக்கும் இருக்க வேண்டும்.

ஸ்புட்னிக் தடுப்பூசியில் ஒரு டோஸ் ஏற்றிக்கொண்டால் போதும் என்ற கருத்தொன்று பரப்பப்பட்டு வருகின்றது. அவ்வாறான கருத்தொன்றினை தெரிவிக்க முன்னர் சுகாதார தரப்பினர் கலந்துரையாடி தெளிவான நிலைப்பாடு ஒன்றை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

நினைத்தால் போல் கருத்துக்களை கூறி மக்களை குழப்பக்கூடாது. இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெற முன்னர் அரசாங்கமே முதலில் தெளிவான அறிவிப்பை விடுத்திருக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார். (4-6)

# பொருளாதாரம் மிக முக்கியமானது நாட்டை நீண்ட காலம் முடக்க முடியாது

## அமைச்சர் பவித்ரா தெரிவிப்பு

(கொழும்பு)

வைத்திய நிபுணர்கள் கூறுவதைப்போல் வருடம் பூராகவும் நாட்டை முடக்கி வைத்துக்கொண்டிருந்தால், நாட்டின் பொருளாதாரம் என்னாவது? நாட்டின் சுகாதாரம் பாதுகாக்கப்படுவது அவசியமானதே, ஆனால் அதை விடவும் நாட்டின் பொருளாதாரத்தை கருத்தில் கொள்ள வேண்டும் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

ஒரு நாளைக்கு பி.சி.ஆர் பரிசோதனைகளுக்காக மாத்திரம் 800 இலட்சம் ரூபா செலவாகின்றதாகவும் சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கொவிட் -19 வைரஸ் பரவல் நிலைமைகளில் சுகாதார அமைச்சு முன்னெடுக்கும் வேலைத்திட்டங்கள் மற்றும் பயணக் கட்டுப்பாடு குறித்து அடுத்தகட்ட தீர்மானங்கள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

நாட்டில் பரவிக்கொண்டுள்ள கொவிட் -19 வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் விதமாக தற்போது நாடு முடக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்காலிக முடக்கத்தை சாதகமான பெறுபேறுகளாக வெளிப்படுத்தி எம்மால் தொடர்ந்தும் நாட்டினை முடக்கி மக்களை வீடுகளுக்குள் அடைத்து வைக்க முடியாது.



கொவிட் வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் அதே வேளையில் மக்களின் நாளாந்த வாழ்க்கை முறைமைக்கும் இடமளிக்க வேண்டும். அதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இதில் மக்களின் செயற்பாடுகள் பிரதானமானது. மக்கள் தமது பாதுகாப்பை முதலில் உறுதிப்படுத்த வேண்டும் என அவர் தெரிவித்தார். (4-6)

# 6 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 6 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு இவ்வாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தினால் மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

அதன்படி, காலி மாவட்டத்தின் நெலுவ, களுத்துறை மாவட்டத்தின் புளத்சிங்ஹல மற்றும் பாலிந்தநுவர, இரத்தினபுரி மாவட்டத்தின் அயகம, குருவிட்ட, கலவான மற்றும் எஹெலியகொட, கொழும்பு மாவட்டத்தின் சீதாவக்கை, நுவரெலியா மாவட்டத்தின் வலப்பனை, மாத்தறை மாவட்டத்தின் பிட்டபெத்தர ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கு இவ்வாறு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (4-6)

# கம்பஹா மாவட்டத்தில் அதிகமான தொற்றாளர்கள்

(கம்பஹா)

நாட்டில் நேற்று முன்தினம் தினம் அடையாளம் காணப்பட்ட 3 ஆயிரத்து 306 கொரோனா நோயாளர்களில் அதிக எண்ணிக்கையிலானோர் கம்பஹா மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர்.

அதனடிப்படையில் இம்மாவட்டத்தில் ஆயிரத்து 4 தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அந்த மாவட்டத்தில் இதுவரையில், 35 ஆயிரத்து 340 பேருக்கு தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. (4-6)




# சிலரது பொறுப்பற்ற செயலால் நாட்டை திறக்க முடியாத சூழல் ஏற்படும்

## உபுல் ரோஹண

(கொழும்பு)

இலங்கையில் சில நிறுவனங்கள் பொறுப்பற்ற வகையில் செயற்படுவதால் பயண தடையை நீடிக்க வேண்டிய நிலை ஏற்படும் என இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பயண கட்டுப்பாடு கடுமையாக அமுல்படுத்தப்பட்டுள்ள போதிலும் சில நிறுவனங்கள் இலாபம் பெறும் நோக்கில் மிகவும் மோசமான முறையில் செயற்படுவதாக சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமை நீடித்தால் எதிர்வரும் நாட்களில் நாட்டை திறக்க முடியாத நிலைமை ஏற்படும். இதற்கு பொது மக்கள், அரச, தனியார் நிறுவனங்களின் பிரதானிகள் பொறுப்பு கூற வேண்டும்.

சில தனியார் நிறுவனங்களின் பிரதானிகள் அத்தியாவசியமற்ற பணிகளுக்கு ஊழியர்களை பணிக்கு அழைத்து அவர்களிடம் இலாபம் பெற நடவடிக்கை மேற்கொள்கின்றனர். இந்த நிலைமை எதிர்வரும் நாட்களிலும் நீடித்தால் நாட்டை திறக்க முடியாத நிலைமை ஏற்படும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (4-6)

# தனிமைப்படுத்தல் நிலையங்களில் வசதிவாய்ப்பை மேலும் அதிகரிக்கவும்

## பிரதேச சபை உறுப்பினர் வலியுறுத்து

(சாவகச்சேரி)

கொரோனா தனிமைப்படுத்தல் நிலையங்களில் வசதிவாய்ப்புகளை மேலும் அதிகரித்து மனிதாபிமான முறையில் தொற்றாளர்களை பராமரிக்க வேண்டும் எனச் சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் திருமதி நி.கலைவாணி கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில்

கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நபர்களை தனிமைப்படுத்தல் மையங்களுக்கு கொண்டு செல்லும் போது அளவுக்கதிகமானவர்களை நோயாளர் காவு வண்டியில் ஏற்றிச் செல்வதனைத் தவிர்க்க வேண்டும்.

அத்துடன் தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்து வீடு திரும்பவர்களை அவர்களது கிராமத்தின் ஆரம்பத்தில், வீதிகளில் இறக்கி விடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது மனிதாபிமானமற்ற செயற்பாடு. அவர்களை வீட்டு வாசலில் இறக்கி விடுவதனை சுகாதாரப் பகுதியினர் உறுதி செய்ய வேண்டும்.

மேலும் தனிமைப்படுத்தல் நிலையங்களில் பெண்கள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள்,மத குருமார்கள் மற்றும் சைவ போசனை உடையவர்களுடைய தேவைகள், சுகாதாரமான உரிய உணவுத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதனை சுகாதாரப் பகுதி உறுதிப்படுத்த வேண்டும்.

அத்துடன் சுத்தமான குடிநீர் மற்றும் மலசலகூட வசதிகள் வழங்கப்படுவதுடன்,மூன்று நேரமும் சோறு வழங்காமல் மாற்று உணவுகள் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். என மேலும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

(4-6,30)

# புதூர் பொங்கலுக்கு 15 பேருக்கு அனுமதி

(நெளுக்குளம்)

வரலாற்று பிரசித்திபெற்ற வவுனியா புளியங்குளம் புதூர் நாகதம்பிரான் ஆலயபொங்கல் விழாவிற்கு 15 பேருக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

புளியங்குளம் புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா நிகழ்வு எதிர்வரும் ஏழாம் திகதி இடம்பெறவுள்ளது.

குறித்த நிகழ்வினை நடாத்துவது தொடர்பாக வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன் போது கொரோனா வைரஸ் பரவலைக் கருத்தில் கொண்டு மடுப்படுத் தப்பட்ட வகையில் குறித்த நிகழ்வினை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள துடன், விசேடபூஜைகள் மற்றும் கிரியைகளை முன்னெடுக்கும் 15பேருக்கு மாத்திரம் பொங்கல் நிகழ்வில் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. குறித்த கலந்துரையாடலில் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர், புதூர் ஆலய நிர்வாகத்தினர், வவுனியா வடக்கு சுகாதாரவைத்திய அதிகாரி, மற்றும் பொலிஸார் கலந்துகொண்டனர். (4-6,299)

# உணவின்றி தவித்த நாய்களுக்கு உணவு வழங்கிய பொலிஸார்



(மன்னார்)

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று காரணமாக விதிக்கப்பட்டுள்ள பயணக்கட்டுப்பாடு காரணமாக மக்கள் மாத்திரம் இன்றி மிருகங்களும் உணவு இன்றி பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் பண்டுல வீரசிங்கவின் எண்ணக்கருவிற்கு அமைவாக மன்னார் மாவட்ட போக்கு வரத்து பொலிஸ் பிரிவினர் இணைந்து மன்னார் மாவட்டத்தின் தற்போதைய பயணக் கட்டுப்பாடு மற்றும் கடை அடைப்பினால் கட்டாக்காலி நாய்கள் உணவு இன்றி தவிர்த்து வருகின்ற நிலையில் நேற்று வியாழக்கிழமை காலை போக்குவரத்து பிரிவு பொலிஸார் உணவு சமைத்து நகருக்குள் இருக்கும் கட்டாக்காலி நாய்களுக்கு உணவு வழங்கினர். (4-6,285)

# வவுனியாவில் அத்தியாவசிய சேவைக்கு தொலைபேசி இலக்கங்கள் அறிமுகம்

(நெளுக்குளம்)

வவுனியாவில் அத்தியாவசிய சேவைகள் தொடர்பில் மக்களுக்குள்ள பிரச்சினைகள் குறித்து முறையிடு வதற்கு ஏதுவாக அவசர அழைப்பு இலக்கங்கள் வவுனியா மாவட்ட செயலகத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அவசர அழைப்பு பிரிவு வவுனியா மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும், மாவட்ட செயலகத்திலும் இயங்கவுள்ளது.

கொரோனா நோய் தொற்று காரணமாக அத்தியாவசிய சேவைகள் தொடர்பில் மக்களுக்கு ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தால் கீழேகுறிப்பிடப்பட்ட அவசர இலக்கங்களுக்கு தெரிவிக்க முடியும் என வவுனியாமாவட்ட செயலகத்தால் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அறிமுகப்படுத்தப்பட்ட அவசர அழைப்பு இலக்கங்களாவன, மாவட்ட செயலகம் : வவுனியா 024 222 2235, 024 222 2233, 024 222 2234. பிரதேச செயலகம் : வவுனியா 024 222 2202, 024 222 2237 , 024 222 1948 பிரதேச செயலகம்: வவுனியா தெற்கு - 024 222 2238, 024 222 2117 பிரதேச செயலகம் : வவுனியா வடக்கு - 024 205 3020, 024 205 3021 பிரதேச செயலகம் : வெங்கல செட்டிக்குளம் - 024 226 0905, 024 226 0904 என்பனவாகும். (4-6,299)

# இரத்ததான முகாம்

(சாவகச்சேரி)

யாழ் மாவட்ட இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் "ஒரு மாதத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குருதிக் கொடையாளர்கள்" எனும் திட்டத்தின் கீழ் இரத்ததான நிகழ்வு பிர தேச ரீதியாக முன்னெடுக்கப்படுகிறது.

அந்தவகையில் யாழ் மாவட்டத்தில் முப்பது தினங்களில் 34கட்டங்களாக இரத்ததான நிகழ்வுகள் இடம்பெற வுள்ளன.

தென்மராட்சி பிரதேசத்தில் இன்று வெள்ளிக்கிழமை நாவற்குழி மகா வித்தியாலயத்திலும், 06.06.2021 ஞாயிற்றுக்கிழமை கைதடி குமரநகரிலும், நாளை மறுதினம் சனிக்கிழமை தென்மராட்சி பிரதேச செயலகத்திலும், எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கைதடி சரஸ்வதி சனசமூக நிலையத்திலும் இரத்ததான நிகழ்வுகள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (4-6,30)

# பழைய முறிகண்டி கிராமத்தில் தொடரும் மணல் அகழ்வு



(அக்கராயன்)

முல்லைத்தீவு பழையமுறிகண்டி கிராமத்தில் நாள்தோறும் டிப்பர்களில்மணல்வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுவதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

2009ஆம் ஆண்டிற்கு பிறகு பழைய முறிகண்டிக் கிராமத்தின் ஆற்றுப்படுக்கைகள், குளத்தின் பின்பு குதி என்பவற்றில் காடுகள் அழிக் கப்பட்டு தொடர்ந்து மணல் கொண்டு செல்லப்படுகின்றது. தொடரும் மணல் அகழ்வு தொடர்பாக முல் லைத்தீவு மாவட்டச் செயலாளர், துணுக்காய் பிரதேச செயலாளர் ஆகியோரிடம் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் செய்யப்பட்டும் மணல் வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றது.

ஆற்றுபடுக்கைகளில் தொடர்கின்றன மணல் அகழ்வினால் பழையமுறிகண்டிக் குளத்தின் அணைக்கட்டிற்கு ஆபத்து இருப்பதாக இப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (4-6,350)



**நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கோணாரா தலைமையில் நெல்லியடி பொலிஸார் நேற்று காலை மோட்டார் சைக்கிள் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டனர்.**

( படம் : மகாலிங்கம் )

# அராலி தெற்குப் பகுதியில் வெடிகுண்டுகள் மீட்பு

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி தெற்குப் பகுதியில் இருந்து வெடிகுண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக மேலும் தெரியவருகையில், அராலி தெற்கினைச் சேர்ந்த நபர் ஒருவர் நேற்றைய தினம் தனது காணியினைச் சுத்தம் செய்துள்ளார்.

இந்த நிலையில் அவரது காணியில் உள்ள கிணறு ஒன்றில் குறித்த வெடிகுண்டுகள் இருப்பதனை அவதானித்த அவர் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனை அகற்றுவதற்கான நீதிமன்றத்தின் அனுமதியை பொலிஸார் கோரியுள்ளனர். அனுமதி வழங்கிய பின்பு குறித்த குண்டுகள் விசேட அதிரடிப் படையினரால் மீட்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



அதுவரை அராலித்துறை இராணுவத்தினரின் கண்காணிப்பின் கீழ் குறித்த வெடிகுண்டுகள் இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம-03,104)

# வாடகைக் கார்கள், முச்சக்கரவண்டிகள் பயணக் கட்டுப்பாட்டில் இயங்கத் தடை

(கொழும்பு)

இலங்கையில் பயணத் தடை அமுல்படுத்தப்பட்டுள்ள காலப் பகுதியில் வாடகை கார்கள் அல்லது வாடகை முச்சக்கரவண்டி சேவைகள் இயங்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண இந்த காலகட்டத்தில் அனைத்து வகையான பொது போக்குவரத்தும் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

பொதுமக்கள் தங்கள் தனிப்பட்ட வாகனங்களை அவசர காலங்களில் அருகிலுள்ள மருத்துவமனைக்கு பயணிக்க பயன்படுத்தலாம் அல்லது மருந்துகளை வாங்க தங்கள் இல்லத்திற்கு மிக அருகில் உள்ள மருந்தகத்திற்கு செல்ல பயன்படுத்தலாம் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

நாடு முழுவதும் பயணத் தடையின்போது அத்தியாவசிய சேவைகள் மட்டுமே செயற்பட அனுமதிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-03)

# பொலிஸாரின் தாக்குதலுக்குள்ளான இளைஞன் வைத்தியசாலையில் மரணம்

## ஐஸ் போதை உட்கொண்டமையால் உயிரிழந்ததாக பிரேத அறிக்கையில் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் பொலிஸாரின் தடுப்புக் காவலில் இருந்தபோது உயிரிழந்த இளைஞனின் பிரேத பரிசோதனை அறிக்கை வெளியாகியுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

அதன்படி, இளைஞன் அதிக ஐஸ் போதைப்பொருளை பாவித்தமையினாலேயே உயிரிழந்ததாக பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு இருதயபுரத்தை சேர்ந்த 22 வயதான இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் இரவு மட்டக்களப்பு தலைமையக பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில் நேற்று சடலமாக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டார்.

அவர் பொலிஸாரால் தாக்கப்பட்டு இறந்ததாக உயிரிழந்த



இளைஞனின் உறவினர்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர். (ம-03)

## வவுனியாவில் பயணத் தடை நேரத்தில்

# வீதியில் பயணித்தவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை

(வவுனியா)

வவுனியாவில் பயணத் தடை நேரத்தில் வீதியில் பயணித்தோர் உள்ளடங்கலாக 130 பேருக்கு எழுமாறாக பி.சி.ஆர் பரிசோதனை நேற்று சுகாதாரப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் தினந்தோறும் 130 பி.சி.ஆர் முடிவுகள் 24 மணிநேரத்தில் வழங்க சுகாதாரப் பிரிவினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் 130 பேருக்கு எழுமாறாக பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அந்த வகையில் வவுனியா, குருமன்காடு பகுதியில் பயணத் தடை நேரத்தில் வீதியால் பயணித்தோர், அரச மற்றும் தனியார் வங்கி ஊழியர்கள், வங்கி காவலாளர்கள், நிறுவனங்களில் பணியாற்றுவோர், சில கிராமங்களைச் சேர்ந்தோர், வவுனியா நகரம் என எழுமாறாக 130 பேரிடம் பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன் முடிவுகளையடுத்து அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ம-03)

## ஒவ்வாமை மற்றும் வேறு நோய் உடையவர்கள்

# யாழில் 5 வைத்தியசாலைகளில் நாளை தடுப்பூசியைப் பெறலாம்

## வடமாகாண சுகாதார பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

சிலவகை மருந்துகள், ஊசி மருந்துகளுக்கு ஒவ்வாமை உடையவர்கள் மற்றும் வேறு ஆபத்துக்குரிய நோய் நிலைமை உடையவர்களுக்கும் யாழ்ப்பாண மாவட்டத்தில் அவசர சிகிச்சைப் பிரிவுகள் உள்ள 5 வைத்தியசாலைகளில் நாளை சனிக்கிழமை கோவிட்-19 தடுப்பூசி மருந்து வழங்கப்படும் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. இலங்கையில் தொற்று அதிகம் எனத் தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் யாழ்ப்பாணமும் உள்ளடங்குவதால், முன்னிலை அடிப்படையில் 50 ஆயிரம் சினோபார்ம் கோவிட்-19 தடுப்பூசி முதற்கட்டமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் யாழ்ப்பாண மாவட்டத்தின் தெரிவு செய்யப்பட்ட கிராம அலுவலகர் பிரிவுகளில் உள்ள பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

சினோபார்ம் தடுப்பூசிகளால் ஏற்படும் பக்கவிளைவுகள் மிக மிக அரிதாகும். எனினும் சில வகை மருந்துகள், ஊசிமருந்துகளுக்கு ஒவ்வாமை உடையவர்கள் மற்றும் வேறு ஆபத்துக்குரிய நோய் நிலைமை உடையவர்கள் அவசர சிகிச்சைப் பிரிவுகள் உள்ள யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்



றும் சாவகச்சேரி, தெல்லிப்பழை, ஊர்காவற்றுறை, பருத்தித்துறை போன்ற ஆதார வைத்தியசாலைகளில் நாளை (ஜூன் 5) சனிக்கிழமை தடுப்பூசிகள் பெற்றுக்கொள்வதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறான நிலைமைகள் இருப்பதாக சந்தேகிக்கப்பட்டு தடுப்பூசி வழங்கப்படாது திருப்பி அனுப்பப்பட்டவர்கள் தமது பிரதேசத்திற்குரிய சுகாதார மருத்துவ அதிகாரியின் பரிந்துரைக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டு மேற்குறிப்பிட்ட வைத்தியசாலைகள் ஏதாவது ஒன்றில் தமக்குரிய தடுப்பூசியினை பாதுகாப்பாக பெற்றுக்கொள்ள முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-03,18,33)

# வீதியால் நடந்து சென்றவர் திடீரென விழுந்து உயிரிழப்பு

## வல்வெட்டித்துறை ஆலடியில் சம்பவம்

(கரணவாய்)

வீதியால் நடந்து சென்றவர் திடீரென விழுந்து உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று காலை வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வல்வெட்டித்துறை ஆலடிப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

சம்பவத்தில் இலந்தைக்காடு இமையாணன் உடுப்பிட்டி பகுதியைச் சேர்ந்த சற்குணராசா வடிவேலு (வயது 57 ) என்பவரே உயிரிழந்தவராவார்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, குறித்த நபர் கடற்றொழில் முடித்து வீடு திரும்பிக் கொண்டிருக்கும் போது அவர் திடீரென்று நிலத்தில் வீழ்ந்துள்ளார். அவரை நோயாளர் காவு வண்டியில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனுமதிக்கப்பட்ட போதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். (ம-03,60)

# ரூ.5 ஆயிரம் கொடுப்பனவு அனைவருக்கும் கிடைக்கும்

## அரச அதிபர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சமுர்த்தி பயனாளிகளுக்கே 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு முதற்கட்டமாக வழங்கப்படுகிறது. ஏனையோருக்கு 2ஆம் கட்டமாகவே வழங்கப்படும் என கூறியிருக்கும் யாழ்.மாவட்ட அரச அதிபர் க.மகேசன், மக்கள் குழப்பமடைய வேண்டாம் எனவும் கூறியுள்ளார்.

அரசினால் வறுமைப்பட்ட குடும்பங்களுக்கு இடர்கால நிதியாக வழங்கப்படும் 5ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு யாழ். மாவட்டத்தில் வழங்கப்பட்டு வருகின்றது. குறித்த நிதியானது முதற் கட்டமாக சமுர்த்தி பெறும் குடும்பங்களுக்கே யாழ். மாவட்ட ரீதியில் வழங்கப்படுகிறது. அதிலும் சமுர்த்தி, முதியோர் கொடுப்பனவு பெறுவோர், மாற்றுத் திறனாளிகளுக்கான கொடுப்பனவு பெறுவோருக்கே முதற்கட்டமாக இந்த கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

ஏனைய பிரிவினருக்கு அடுத்த கட்டமாக இந்த கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது என்றார். (ம-03)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.06.2021 இல் வெளியிடப்பட்டது.